**C.C. No. 122/2021** 03.10.2023

**PW**1 <u>முருகப்பன்</u>

<u>ம.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1)எதிரி என்னிடம் முதன் முதலில் பணம் கடன் வாங்கும் பொழுது அதற்கு செக்யூரிட்டியாக எதிரி என்னிடம் கையெழுத்திட்டு கொடுத்த 5 வெற்று காசோலைகள், 3 கடனீட்டு பத்திரங்கள், 2 வெற்று தாள்கள் ஆகியவற்றில் இவ்வழக்கு காசோலை எண் 546732 மற்றும் சி.சி.160/2021 வழக்கு காசோலையான 546733 Indus Ind வங்கி காசோலை உள்ளிட்ட 3 காசோலைகளையும் 2 கடனீட்டு பத்திரங்களையும், 2 வெற்று தாள்களையும் எனது perfectexchange@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலிருந்து எதிரியின் yuvaraj.madura@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 17.11.2020 தேதியில் scan செய்து அனுப்பிவிட்டேன் என்றால் மறுக்கிறேன். நான் அனுப்பவில்லை. நான் தான் மின்னஞ்சல் அனுப்பினேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தொடர்பாக கணக்கு பட்டியல் இவ்வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் வங்கி கணக்கு பட்டியல் தாக்கல் செய்தேனா அல்லது ஆடிட்டரிடம் பெற்ற கணக்கு பட்டியல் தாக்கல் செய்தேனா என்று சரியாக நினைவில் இல்லை. நான் கணக்கு பட்டியல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2)எதிரி என்னிடம் நாள் வட்டிக்கு முதலில் கடன் வாங்கிய போது கடனுக்கு செக்யூரிட்டியாக கொடுத்த வழக்கு காசோலையை வைத்து எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மற்ற காசோலைகள் மற்றும் கடனீட்டு பத்திரங்களை வைத்து எனது நண்பர் சதீஸ்குமார் என்பவர் மூலம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும், அதற்கு செக்யூரிட்டியாக கொடுத்த ஆவணங்களை எதிரிக்கு திருப்பி தராமல் அதை வைத்து இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பொய். எதிரி எனக்கு செலுத்த வேண்டிய வட்டியையும் திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.